1

## சிறப்பு வரைபடம் 1.6
## எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம்

எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் இலங்கையின் இறக்குமதிக் கூடையின் பாரிய செலவின வகையாக விளங்கி, கடந்த 10 ஆண்டுகளாக வருடாந்தச் சராசரியாக மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 20 சதவீதமாகக் காணப்படுகின்றது. 2025இல் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் ஆகியவற்றின் இறக்குமதி அளவுகள் அதிகரித்த போதிலும், பிரதானமாக மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி போன்றவற்றின் குறைந்தளவிலான அலகு விலைகளினால் உந்தப்பட்டு, எரிபொருள் இறக்குமதிச் செலவினமானது 2024இன் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிலிருந்து 2025இல் ஐ.அ.டொலர் 4 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தையிலுள்ள விலை அசைவுகளுடன் இசைந்துசெல்லும் வகையில், மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலை 2024இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 84.7 இலிருந்து 2025இல் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 73.2 இற்கு வீழ்ச்சியடைந்தது.

எனினும், மத்திய கிழக்கு யுத்தத்தைத் தொடர்ந்து, அதிகரித்துள்ள புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்வடைந்தும் தளம்பல்மிக்கதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், 2026இல் இலங்கையின் எரிபொருள் இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### வருடாந்த எரிபொருள் இறக்குமதிகள்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி

### வருடாந்த மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி